**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 90/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.2(முருகேசன்)**
**01.11.2025**

**1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.
2. வாதி எனது நண்பர் ஆவார். வாதி எனக்கு 30 வருட நண்பர். 30 வருடங்களுக்கு முன்பு வாதி எனக்கு பழக்கம் இல்லை. அவரை தெரியாது என்றால் சரிதான்.
3. எதன் அடிப்படையில் வாதி எனக்கு பழக்கம் என்றால் மாத்தூர் ரவுண்டானாவில் பஸ் ஏற வருவார், அதன் மூலம் எனக்கு பழக்கமாகும். ரவுண்டானாவில் இருந்து OFT க்கு வேலைக்கு செல்வார். 30 வருடம் என்பதால் வாதி எனக்கு 1995 முதல் தான் பழக்கம் என்றால் சரிதான். அதற்கு முன்பு வாதி எங்கு இருந்தார், என்ன வேலை பார்த்தார் என்று தெரியாது என்றால் சரிதான், கேள்விப்பட்டுள்ளேன். என்ன கேள்விப்பட்டேன் என்றால் அப்போது அவருடன் வேலை பார்த்தவர்கள் தாவா மனை உள்ள இடத்தில் குடியிருந்தார்கள், அவர்கள் தான் தாவா இடத்தில் குடியிருந்து கொண்டு வாதி வேலைக்கு சென்றதாக சொன்னார்கள். அவ்வாறு சொன்ன நபர்களின் பெயர் தெரியாது. எந்த மனையில் குடியிருந்தார்கள் என்ற விவரம் தெரியாது.
4. வாதி சொத்து வாங்கிய விவரம் எனக்கு தெரியும். வாதியின் கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை.
5. வாதி எனக்கு பழக்கமான பிறகு தான் அவர் சொத்து வாங்கினாரா என்றால் அதன் பிறகு தான் வாங்கினார்.
6. தாவா சொத்தின் சர்வே எண் 1/1, தற்போது 1/B ஆகும். அந்த சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் முத்துலட்சுமி அம்மாள் பெயரில் உள்ளது.
7. தாவா சொத்தில் உள்ளதாக சொல்லும் வாதியின் வீட்டிற்கு நான் 30 வருடத்தில் சென்றுள்ளேனா என்றால் இல்லை. நான் 30 வருட காலத்தில் திருச்சியிலிருந்து கீரனூர் மற்றும் புதுக்கோட்டைக்கு சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். தற்போதுள்ள தேசிய நெடுஞ்சாலையில் தான் சென்றேன் என்றால் சரிதான்.
8. அவ்வாறு செல்லும்போது ரோட்டு ஓரத்தில் உள்ள கடைகள் மற்றும் வீடுகளை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்தின் நான்கெல்லை தென்புறம் 20 அடி கிழமேல் ரோடு, கிழக்கில் திருச்சி–புதுக்கோட்டை ரோடு, மேற்கில் 89 ஆம் எண் மனை, சாட்சி தற்போது தாவா சொத்திற்கு வடபுறத்தில்

ரோடு என சொல்கிறார். தென்புறத்தில் காம்ப்ளக்ஸ் உள்ளது. அந்த காம்ப்ளக்ஸ் பெயர் தெரியாது.

9. தற்போது தாவா சொத்தில் என்ன உள்ளது என்றால் மெத்தை வீட்டில் மளிகை கடை, பேன்சி ஸ்டோர், மாடியில் டெய்லர் கடை, கீழே செல்ரீசார்ஜ் கடை உள்ளது. மேற்சொன்ன கடைகள் தாவா இடத்திற்கு எப்போது வந்தது என்றால் 15 வருடங்களுக்கு முன்பு வந்தது.

10. தாவா சொத்தில் கடைகளை யார் கட்டியது என்றால் முருகேசன், ஜெயபாரதி கட்டினார்கள். மேற்படி இடத்தில் ரீசார்ஜ் கடை வைத்துள்ள நபரை தெரியும். மற்ற நபர்களை தெரியும், பெயர் தெரியாது. அவர்கள் அனைவரையும் முருகேசன் மற்றும் ஜெயபாரதி தான் வாடகைக்கு வைத்தார்கள் என்றால் சரிதான்.

11. தாவா சொத்தில் முருசேகன் மற்றும் ஜெயபாரதி வீடு கட்டியுள்ள விவரமும், கடைகளை வாடகைக்கு விட்டுள்ள விவரமும் வாதிகளுக்கும் தெரியும் என்றால் சரிதான். வாதிகளுக்கு எப்போது தெரியும் என்றால் 2018 இல் தான் தெரியும்.

12. தாவா சொத்தை பொறுத்து 2019 இல் முத்துலட்சுமிக்கு சக்கரபாணி தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுத்தார். அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். பதிவு அலுவலகத்திற்கு நானும், வாதிகளும் ஒன்றாக சென்றோமா என்றால் இல்லை, அவர்கள் எனக்கு முன்பே திருவெறும்பூர் பாதை வழியாக வந்தனர், நான் புதுக்கோட்டை பாதை வழியாக வந்தேன். மற்றொரு சாட்சி என்னுடன் வந்தாரா என்றால் இல்லை, அவர் வாதிகளுடன் வந்தார், அவரை பற்றி எனக்கு தெரியாது.

13. நான் சாட்சி கையெழுத்து போட்ட பத்திரத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.4 பத்திர சொத்து விவரத்தில் காலிமனை இடம் தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, கட்டிடம் உள்ளது பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

14. பத்திரம் முடிந்து செல்லும்போது வாதிகள் திருவெறும்பூர் பாதை வழியாக சென்றுவிட்டனர். நான் புதுக்கோட்டை ரோடு வழியாக சென்றேன்.

15. புல எண் 1/92, 1/93 ஆகியவற்றிற்கும் வாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். வாதிகள் கேட்டுக்கொண்டபடி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

S/d– C.Rajesh, B.A.B.L.,
சார்பு நீதிபதி,
கீரனூர்.